**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.401/2025**

CNR No. TNTL06-000534-2025

**முத்துகிருஷ்ணன்** ... வாதி

–எதிர்–

ராம்பிரபு ... பிரதிவாதி

இந்த வழக்கு 07.11.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 08.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தோன்றாதரப்பினராக உள்ள நிலையில், வாதி தரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூ.63,567/– மற்றும் அசல் தொகை ரூ.50,000/– பிராது தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை 12 % வட்டியுடன் செலுத்தக் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்:–**

2.1) பிரதிவாதி தனது அவசர காரியங்களுக்காகவும், அவரது குடும்ப செலவுகளுக்காகவும் கடந்த 05.09.2024ம் தேதி ரூ.50,000/–ஐ வாதியிடம் கடனாக பெற்றுக் கொண்டு, அதற்கு ஆதரவாக பிரதிவாதி பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி பிராமிசரி நோட்டில் பிரதிவாதியின்

மனைவி சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், மேலும் வாதி கேட்கும்போதோ அல்லது வாதியின் உத்தரவிற்கிணங்க மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்துவதாக ஒத்துக்கொண்டுள்ளார் என்றும் இருந்தபோதிலும் பிரதிவாதி கடன் வாங்கிய தேதியிலிருந்த எந்தவிதமான வட்டி தொகையும் செலுத்தவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

2.2) அதன் பின்னர் வாதி பிரதிவாதியிடம் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து மேற்படி கடன் மற்றும் அசல் தொகையை செலுத்துவதற்காக வைத்தார் என்றும் இருந்தபோதிலும் பிரதிவாதி அதை பொருட்படுத்தாமல் இருந்து வந்தார் என்றும் எனவே வாதி கடந்த 24.09.2025 ம் தேதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை பிரதிவாதி பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் எந்தவிதமான பதில் அறிவிப்பையும் அனுப்பவில்லை என்றும் எனவே, வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிக்கு உரிய முறையில் அழைப்பாணை அனுப்பியும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 03.03.2026 ம் தேதி தோன்றாதரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

4) வாதி தரப்பில், வாதி திரு. முத்துகிருஷ்ணன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதியிடம் பிரதிவாதி அவசர தேவை மற்றும் குடும்ப செலவிற்காக ரூ,50,000/− ஐ கடனாக பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதன் பின்னர் எந்தவிதமான வட்டி மற்றும் அசல் தொகையை செலுத்தவில்லை என்றும் அதனால் சட்ட அறிவிப்பு வாதி அனுப்பினார் என்றும் இருந்தபோதிலும் பிரதிவாதி எந்தவிதமான பதில் அறிவிப்பையும் அனுப்பவில்லை. எனவே வாதி தரப்பில் அவரது சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் வழக்கை

நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது.

5) <u>இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை என்னவென்றால்</u>?

**1) வாதிக்கு, பிரதிவாதி ரூ.63,567/− ஐ செலுத்த வேண்டும் என்றும் மேலும் அசல் தொகை ரூ.50,000/−க்கு பிராது தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை 12% வட்டியுடனும் செலுத்த கடமைப்பட்டவரா?**

6) வாதி / வா.சா.1 தனது சாட்சியத்தில், பிரதிவாதி கடந்த 05.09.2024ம் தேதி ரூ.50,000/−ஐ வாதியிடம் அவசர மற்றும் குடும்ப தேவைகளுக்காக கடனாக பெற்றுக் கொண்டு கடனுறுதி சீட்டு/ வா.சா.ஆ.1ஐ எழுதிக் கொடுத்துள்ளார் என வழக்குரையில் உள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

7) வாதி தரப்பில் அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு கடந்த 24.09.2025ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு / வா.சா.ஆ.2 அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் அசல் தொகை ரூ.50,000/− மற்றும் அதற்குரிய வட்டியை செலுத்த சொல்லி அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி தரப்பில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஐ பரிசீலனை செய்கையில், பிரதிவாதி தரப்பில் மேற்படி அறிவிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வாதியிடம், பிரதிவாதி அவரது அவசர மற்றும் குடும்ப செலவுகளுக்காக ரூ.50,000/− பெற்றுக் கொண்டு, அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு / வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்துள்ளார் என்பது வாதி / வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.1 வழக்குரையில் உள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

8.2) கடனுறுதி சீட்டை அடிப்படையாக கொண்ட ஒரு வழக்கில் கடனுறுதி சீட்டு நிறைவேற்றப்பட்டதை நிரூபிக்கும் தொடக்க நிலை பொறுப்பு

வாதியின் வசம் உள்ளது. மேற்படி பொறுப்பை வாதி நிறைவேற்றியுள்ளார். மேற்படி கடனுறுதி சீட்டு மறுபயனிற்கு ஆனது என வாதிக்கு ஆதரவாக ஓர் அனுமானத்தை நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் மேற்படி அனுமானத்தை மறுத்தளிப்பது பிரதிவாதியின் பொறுப்பு ஆகும்.

8.3) வாதி இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டு தக்க மறுபயன் தொகை கொடுத்து எழுதப்பட்டுள்ளது என்பதை சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 118 ன் கீழான அனுமானம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வா.சா.ஆ.1 க்குரிய சட்ட அனுமானத்தை மறுத்து நிரூபிப்பதற்கு வழி வகுக்கும் எந்தவிதமான சூழ்நிலைகளையும் பிரதிவாதி தரப்பில் முன்னிடவில்லை.

8.4) வாதி தரப்பில் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பான வா.சா.ஆ.2 ஐ பெற்றுக்கொண்ட பிரதிவாதி எந்தவிதமான பதில் அறிவிப்பையும் அனுப்பவில்லை. மேலும் இந்த வழக்கில் ஆஜராகி தனது தரப்பு வாதத்தை முன்வைக்கவில்லை. எனவே வாதி தரப்பில் கடன் தொகை கொடுத்த பின்னர் பிரதிவாதி அதை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் எந்தவிதமான வட்டி மற்றும் அசல் தொகையை செலுத்தவில்லை என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

8.5) மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததை தக்க ஆவணம் மற்றும் சாட்சியத்தின் வாயிலாக நிரூபித்துள்ளார். மேலும், வாதி கொடுத்த கடன் தொகையை பிரதிவாதி செலுத்தவில்லை என்பது வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி**

**ரூ.63,567/—ஐ செலுத்த வேண்டும் என்றும், மேலும் அசல் தொகையான ரூ.50,000/— க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 9% வருட வட்டியும் பின்னர் தொகை முழுவதையும் செலுத்தி முடிக்கும் காலம் வரை 6% வருட வட்டியும் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 28ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Judgment uploaded on 28.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.28 17:47:46 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1) **<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>** -

வா.சா.1 – திரு. முத்துகிருஷ்ணன் (வாதி)

2) **<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** -

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 – | 05.09.2024 தேதியிட்ட புரோ நோட் (அசல்) |
| வா.சா.ஆ.2 – | 24.09.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.3 – | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக கவர் (அசல்) |

3) **<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Judgment uploaded on 28.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.28 17:47:36 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண்.401/2025
சீரான/ வரைவு தீர்ப்புரை
28.07.2026.